பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 25 முஹறம் 1 இதழ் ...

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10. 11. 80.

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1980-11-14 PERIODICALS DIVISION LIBRARY

## யுத்த எதிரொலி!

### ஈரானில்

(தெஹ்ரான்)

ஈரானில் உணவுப் பங்கீட்டு கூப்பன்முறை அடுத்த சில தினங்களில் அமுலுக்கு வரும் என்றும், சனிக்கிழமை முதல் பெட்ரோல் விலை மூன்று மடங்காக அதிகரிக்கும் என்றும் ஈரானிய வானொலி நேற்று அறிவித்தது.

### ஈராக்கில்

(பக்தாத்)

ஈராக்கில், அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களை தொண்டர் படையில் சேர்த்துக் கொள்ள ஈராக் அரசு முடிவு செய்துள்ளது. இத் தொண்டர் படையில் சேர விரும்புவோர் 10 தினங்களுக்குள் விண்ணப்பிக்குமாறு அரசு கேட்டுள்ளது.

# தமிழீழம் அமைப்பு: சரியான சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கை

## கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் 'அமிர்' அறிவிப்பு

(நமது அலுவலக நிருபர்)

"தமிழ் ஈழம் அமைக்கப்படுவது குறித்து வெளிநாட்டில் உள்ளவர்கள், வெவ்வேறு விதமாகப் பேசலாம்; பிரகடனங்கள் வெளியிடலாம். இவைபற்றி எமது சபைக் கூட்டங்களில் விமர்சிக்க வேண்டிய அவசியமே இல்லை. தமிழ் ஈழம் அமைப்பது பற்றி; சரியான சந்தர்ப்பத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்"

இவ்வாறு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுகையில் கருத்து வெளியிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக்கூட்டம் நேற்றுக் காலை கூட்டணி தலைமைச் செயலகத்தில் கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. காலையில் ஆரம்பமான கூட்டம் நேற்று பிற்பகல்வரை நீடித்தது. பொதுச் சபைக் கூட்டத்தின் இறுதியில் இன்றைய அரசியல் நிலவரம் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அப்பொழுது செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"தமிழ் ஈழம் என்பது; ஒரு முடிவான தீர்மானம். அதனை எப்பொழுது, எப்படி அடைவது என்பது குறித்துத் தான் சரியான பாதையில் நாம் செயல்படவேண்டும். ஏனென்றால் அதனை அமைக்கவேண்டிய முழுப்பொறுப்பும் எம்மையே சார்ந்தது.

"வெளிநாட்டில் உள்ளவர்கள் இதுகுறித்து பல்வேறு விதமாக விமர்சிக்கலாம். எப்படியும் பேசலாம். அறிக்கைகள்; பிரகடனங்களும் வெளியிடலாம். ஆனால் இதுபற்றி நாம் எமது சபைக்கூட்டங்களில் பேசி, வீண் சர்ச்சைகளைக் கிளப்பி, நேரத்தை வீணடிக்க விரும்பக்கூடாது தமிழ் ஈழம் அமைப்பது சம்பந்தமாக சரியான சந்தர்ப்பத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு முன்னர் நமது எல்லைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்" என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

### வைகுந்தவாசன் பிரகடனம்

நேற்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில்; திரு. வைகுந்தவாசனின் பிரகடனம் பற்றி சிலர் பிரஸ்தாபித்தபோதிலும்; அது உரிய முக்கியத்துவம் பெறத்தவறி

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். லயன்ஸ் கழகம் யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தும் நத்தார் - புதுவருட சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் லயன்ஸ் கழகம் கடந்த ஆண்டுகளைப்போன்று இவ்வாண்டும் யாழ். வியோ கழகத்துடன் இணைந்து நத்தார்-புதுவருட வாழ்த்து மடல்களுக்கான சித்திரப் போட்டியை பாடசாலை மாணவரிடையே நடத்தவிருக்கிறது.

யாழ்.மாவட்ட அடிப்படையில் நடத்தப்படவிருக்கும் இச் சித்திரப்போட்டிபற்றிய சுற்று நிருபம் யாழ். மாவட்டத்திலுள்ள சகலபாடசாலைகளுக்கும் யாழ் லயன்ஸ் கழகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி செயலகத்தை முற்றுகையிட்ட இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி கிராமச்சபையைச் சேர்ந்த மயிலியதனை வட்டாரம், வல்வெட்டித்துறை நகரசபையுடன் இணைக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து இவ்வட்டாரத்தை மீண்டும் உடுப்பிட்டி கிராம சபையுடன் இணைக்குமாறு கோரி கூட்டணித் தலைவர்களுக்கு விடுத்த கோரிக்கை குறித்து தலைவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்கு ஆட்சேபம் தெரிவித்து சுமார் நூறு இளைஞர்கள் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டனர்.

நேற்றுக்காலை சுமார் 10-30 மணியளவில் கூட்டணி தலைமைச் செயலகம் முன்வந்த இந்த இளைஞர்கள், பொதுச் சபைக் கூட்டம் முடியும் வரை காத்திருந்து பகல் 2-30 மணியளவில் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தையும், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தையும் சந்தித்து தங்களது கோரிக்கை பற்றிக் கூறினர்.

இவ்வட்டாரம்1969-ல் இணைக்கப்பட்டபோதும் இதுவரை எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும், வர்ப்பணம் வீணாகிறது என்றும் பல குற்றசாட்டுக்களைச் சுமத்தி; இதுசம்பந்தமாக கடந்த ஜனவரி மாதத்தில் கூட்

8ம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டை மீறியோரை தண்டிக்க புதிய முறை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பில் சில திருத்தங்களைச் செய்வதென்று மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஒழுக்க நெறிக்கோவை ஒன்று தயாரிப்பதென்றும் ஆயுட்கால அங்கத்தவர்களை கூடுதலாகச் சேர்த்துக்கொள்வதென்றும் செயற்குழு முடிவு செய்தது-

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மூளாய் இல்லத்தில் மத்திய செயற்குழு கூடியது. இக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

"கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எவர் மீதும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக செயலாளர் நாயகம் கருதினால் அவர் மீது ஒழுங்குநடவடிக்கைக் குழு விசாரித்து அது நிரூபிக்கப்பட்டால் அவரை உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மத்திய செயற்குழுவுக்கு உண்டு. என்ற திருத்தம் யாப்பில் செய்யப்பட்ட முக்கிய திருத்தமாகும்.

### ஈழவேந்தன் வெளியேற்றசிபார்சு

கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக திரு. ஈழவேந்தனை கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று பொதுச் சபைக்குச் சிபார்சு செய்வதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (கு

## பஸ் விபத்தில் மூவர் பலி!

(வறக்காப்பளை)

வறக்காப்பளையில் நேற்று நிகழ்ந்த திருக்கோணமலை பஸ் டிப்போவைச்சேர்ந்த இ.போ.ச, பஸ்-லொறி விபத்தில், மூவர் ஸ்தலத்தில் மரணமானார்கள்! காயமடைந்த 35 பேரில் 9பேரின் நிலைமை கவலைக்கிடமாகஉள்ளது, காயமடைந்தவர்கள் வறக்காப்பளை, கேகாலை, கண்டி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வீடு வளவு விற்பனைக்கு

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியில் காங்கேசன்துறை வீதி, 586/3 இலக்கத்தில் மூன்றேமுக்கால் பரப்புக் காணி கல்வீட்டுடன் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 586/3, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை
அல்லது
மலாயா சலூன்
7314 63, கஸ்தூரியார் வீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மீசாலை வடக்கு வேம்பிராயில் இருபது பரப்பு தோட்டக்காணி நல்ல தண்ணீர் வசதியுடன் உள்ளது. பிசகற்ற உறுதி. பரப்பு ரூபா 5000/- விபரங்கட்கு: சி. கணேசன், டச் றோட், மீசாலை வடக்கு, மீசாலை. 7281

யாழ். அராலி வீதி, அலுமினியம் தொழிற்சாலை அருகில் சகல வசதிகளுடன் கல் வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: அ. நவமணி, 617, ஒட்டுமடம்சந்தி, யாழ்ப்பாணம் 7309

தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில். 7289

## வாடகைக்கு

யாழ். வளாகத்துக்கருகில் பரமேஸ்வராச் சந்தியில் உணவுச்சாலை அமைக்கக்கூடிய கட்டிடம் உடனடியாக வாடகைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி.க. தனபாலசிங்கம், 11, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 7294

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு சோடாவேன்விற்பனவுக்குபில் போட்டு, காசுவாங்கக் கூடிய பொறுப்பான (சேல்ஸ்மேன்) விற்பனையாளர்களும் சோடா பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய கூலி ஆட்களும் தேவை. அத்தாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7311

## வகுப்புகள்

தராதரமும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும் Icing, Cake Making, Speech, Drama வகுப்புகள் 15-11-80ல் ஆரம்பமாகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விம்ஸ், 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம், 7308

## வட்டுக்கோட்டைக் கிராமசபை
## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 18-11-80ம்திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப் பணமாக ரூபா 250/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 25/-ம், 13-11-80ம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரங்களில் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதி இவ்வலுவலகத்திற்கும் ஒரு பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும் மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

**வேலை விபரம்**

1. சிறுவர் பூங்காவிற்கான உபகரணங்கள் வழங்குதலும், அமைத்துக்கொடுத்தலும்.
2. பல கூறுள்ள கடைக்கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்குதல்.
3. சிறுவர் பூங்காவிற்கு மின்சாரம் வழங்குதல்.

**மு. சுப்பிரமணியம்,**
நிர்வாகஸ்தர்.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை. 7296

## இலவசம்

பனம் விதைகள் நட்டு உண்டாக்க விரும்பும் அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள், கோணாவில் பகுதி மற்றும் குடியேற்றப்பகுதி மக்களுக்கு 12-11-80 புதன்கிழமை அன்று பனம் விதைகள் எமது வானத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும் தொடர்ந்து ஸ்கந்தபுரம் இராஜவைத்தியசாலையில் பனம்விதைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்' யாழ்ப்பாணம், 7299

இ. சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி &
நொத்தாரிஸ்,
திருநெல்வேலி, தெற்கு,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்**

மரண சாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம், இல: 46, பிறவுண் றோட்டைச் சேர்ந்த செல்லையா ஐங்கரமூர்த்தியின் ஆதனங்களும், பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

ஐங்கரமூர்த்தி கைம்பெண் இராஜராஜேஸ்வரி,
இல: 46, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
— மனுதார்.

இல: தத்துவம்: 3554

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

1980-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதி.

**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

வரைவு:
**இ. சிவசுப்பிரமணியம்,**
மனுதார் சட்டத்தரணி.
7266

## சமத்துவம் வேண்டிப் பிரார்த்தனை

(அரியாலை)

இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாடு ஏற்படவும் ஆலய முகாமைகளின் மனக்கதவுகள் திறக்கவும், மக்கள் மத்தியில் மனமாற்றம் சிந்தனைத் தெளிவு ஏற்படவும்
(5-ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

கரம்பன் கிழக்கு, காளி கோவிலடியைச் சேர்ந்த அம்பலவாணர் கணபதிப்பிள்ளை பெண் சாரதாம்பாளின் மரணச் சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் மரண சாதனமில்லாத மரணச் சொத்தின் தத்துவகாரரை நியமிக்கும்படியான விண்ணப்ப விடயத்தில்

— மரணமெய்தியவர்

சுந்தரம்பிள்ளை தாமோதரம்பிள்ளை, காளிகோவிலடி,
கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
— மனுதார்.

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: ரி/24

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3-ம் திகதி,

நீதிமன்றக்கட்டளைப்படி

**க. குலஞானம்,**
(ஒப்பம்)
பதிவாளர்

வரையப்பட்டது.
**வ. மயில்வாகனம்,**
[ஒப்பம்]
மனுதாரின் சட்டத்தரணி.
7301

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

8-11-80ல் சங்கானை ஐக்கிய நலன்புரிச்சங்கத்தால் நடத்திய பரிசுக்குரிய இலக்கங்கள்

(1) 2059 (2) 2062 (3) 1621
(4) 1533 (5) 0019 (6) 1918

7310 செயலாளர்.

## கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு ஓர் அழைப்பு

**கத்தோலிக்க சமயபாட மூன்று மாத, மூன்று வருட ஆசிரியப் பயிற்சிகள்**

மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களை ஆசிரியர்களிடமிருந்து கல்வித் திணைக்களம் கோரியுள்ளது. விண்ணப்பித்துப் பயிற்சி பெற யாழ். மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் தகுதியான ஆசிரியர்களை அன்புடன் அழைக்கிறது. விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

அருட்திரு யே. நீக்கிலஸ் அடிகளார்,
மறைக்கல்வி நடு நிலையம், ஆயர் இல்லம்
அஞ்சற்பெட்டி எண்: 2, யாழ்ப்பாணம்.

சி. வின்சென்ற்,
பொதுச் செயலாளர்.

**யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்.** 7304

# தனித்து வாழ்ந்த மூதாட்டி கொலை!

## ரூபா 9 ஆயிரம் கொள்ளை

(மன்னார்)

தென்னந் தோட்டத்தில், சிறிய வீட்டில் தனித்து வாழ்ந்த 80 வயதுப் பெண் ஒருவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டு, 9 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முகம்மது பீபீ என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார்

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

எருக்கலம்பிட்டியில் ஒரு ஏக்கர் தென்னந் தோட்டத்தில் சிறிய வீடமைத்து, தனியாக வாழ்ந்துவந்த முகம்மது பீபீ (வயது 80) என்பவர் வீட்டில் நள்ளிரவு கொள்ளை கோஷ்டியொன்று புகுந்து அவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்துவிட்டு அங்கிருந்த 9 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக அறியப்படுகிறது

இச்சம்பவம் பற்றி மன்னார் பொலிசார் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## மானிப்பாய் பட்டினசபை
## கேள்விப்பத்திர அறிவித்தல் - 1981

1981-ம் ஆண்டிற்கான பின்வரும் குத்தகைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 20-11-80-ந் திகதி காலை 10-30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | கேள்விப் பிணை | கேள்விப் பத்திரக் கிரயம் |
|---|---|---|---|
| 1. | சந்தையிலுள்ள ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 25-00 |
| 2. | மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, சைக்கிள் காலை உட்பட | 100-00 | 25-00 |

இவ்வலுவலகத்தில் 19-11-80-ந் திகதி காலை 12-00 மணி வரைக்கும் வழங்கும் கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப்பத்திரக் கிரயம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**பி. யோ. பாலேந்திரா,**
விசேட ஆணையாளர், மானிப்பாய்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
பட்டினசபை, மானிப்பாய்.
04-11-1980. 7295

## பிஸ்கால் விற்பனை

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**

மேக்கண்டில் கிறடிட்,
இலக்கம் 51 — 83, ரஜின வீதி,
கொழும்பு 1.

வழக்காளி

வழக்கு இலக்கம் எஸ்/31970

விரோதமாக

1. கிருஷ்ணசாமி சாமி,
98/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. ஆர். சிவதாஸ்,
பிரதான வீதி, தொண்டமானாறு.
3. கே. தம்பையா,

இலக்கம் 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்சொல்லப்பட்ட 3-ம் எதிராளியாகிய கே. தம்பையா, இலக்கம் 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வருக்கு வெளியாக்கில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 6899/03ம் 19-6-1975 தொடக்கம் 15% வட்டியும் கடன் இறுக்கும்வரை 5% வட்டியும் இற்றை வரை கோட்டுச்செலவும், மேற்குறித்த வழக்காளியாகிய மேக்கண்டில் கிறடிட், இலக்கம் 51 — 83, ரஜின வீதி, கொழும்பு 1னுடைய பட்சத்தில் மேற்குறித்த பணத்தை அறவிடுவதற்காக கீழ் குறித்து சொல்லப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

**ஆதனடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர் இறை, நல்லூர் கோவிற்பற்று, "குருக்கள்வளவு" இதன் நிலப்பரப்பு 2ம் குளி 6½ யும் இதற்கு எல்லைகள் கிழக்கு: பாதை, வடக்கு: அம்பலவி வேலுப்பிள்ளையின் ஆதனம், மேற்கு: சதாசிவத்திற்கும் பெண் திலகவதிக்குமுரிய ஆதனம், தெற்கு: றோட்டு, கட்டிமுடிக்கப்படாத கட்டிடவீடும், இதற்கு வடமேற்கால் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், இக்கிணற்றுக்குப் போவதற்கு கிழக்கால் வழிவாய்க்கால், பாவிப்புரித்தும்.

**பொ. பாக்கியநாதன்,**
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
80-10-21 7303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் எண்ணெமந்திரிக்கு ஈராக்கில் சத்திரசிகிச்சை!

## சித்திரவதை செய்யப்படவில்லை என்கிறது ஈராக்

பக்தாத், நவ. 9

ஈராக் வீரர்களால் சிறைபிடிக்கப்பட்ட ஈரான் எண்ணெ அமைச்சர் ஜனுப் முகம்மது ஜகாத்தொங்குயன் போர் முனையில் சிறைபிடிக்கப்பட்டபோது காயமடைந்தார் என்றும் பக்தாத்தில் தற்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது என்றும் ஈராக் தெரிவித்துள்ளது.

ஜனுப் தொங்குயன் ஈராக்கில் சித்திரவதை செய்யப்படுகிறார் என்று ஈரான் கூறிவருவதில் அர்த்தமில்லையென்றும் அவர் இப்போது ஆபத்து எதுவும் இன்றி பக்தாத்தில் இருக்கிறார் என்றும் ஈராக் தெரிவித்தது.

அமைச்சர் ஈராக்கிய படைகளால் கடத்திச்செல்லப்படவில்லை என்றும் போர் முனையில் சடும்சண்டையின் பின்னரே சிறைபிடிக்கப்பட்டார் என்றும் இத்தகைய சூழ்நிலையில் அவருக்குக் காயமடைவது சகஜம் என்றும் ஈராக் பாதுகாப்புச்சபை தெரிவித்தது. (இ)

போர் ஆபத்தைக் குறைக்க

## சோவியத்துடன் ஒத்துழைக்க அமெரிக்கா தயார்!

### அதிபர் கார்ட்டர் உறுதி

மாஸ்கோ, நவ. 9

போர் ஆபத்தைக் குறைப்பதற்கு சோவியத்யூனியனுடன் முன்னரைப்போலவே ஒத்துழைக்க அமெரிக்கா தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றபோதிலும் புதிய அதிபர் பதவியேற்கும்வரை கடமையிலிருக்கும் ஜனாதிபதி திரு. கார்ட்டர் சோவியத்யூனியனின் அக்டோபர் புரட்சியின் 63-வது ஆண்டு நிறைவையொட்டி விடுத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவுக்கு திரு கார்ட்டர் அனுப்பியுள்ள செய்தியில், 'உலக அமைதிக்குப்பாடுபடுவதையே அமெரிக்கா விரும்புகிறது என்று தெரிவித்துள்ளார். (கு)

## அஸாமில் நாளொன்றுக்கு 10 கோடி நஷ்டம்

புதுடில்லி, நவ. 9

அஸாமில் நடைபெற்றுவரும் கிளர்ச்சி காரணமாக நாட்டுக்கு நாளொன்றுக்கு 10 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருவதாக மத்திய விவசாய ஸ்ரேட் மந்திரி திரு பாலேந்திரராவ் தெரிவித்துள்ளார்.

இதுவரை 3600 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (கு)

## தமிழாராய்ச்சி மாநாடு திரைப்படமாகும்

(சென்னை)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மதுரையில் நடைபெறவுள்ள ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வண்ணத் திரைப்படமாகத் தயாரிக்கப்படவுள்ளது.

இதுவரை நடைபெற்ற மாநாடுகளை எடுத்தது போல் நுகாட்சிப்படங்களாக அல்லாமல் முழு அளவிலான வண்ணத் திரைப்படமாகத் தயாரிக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதாக மாநாட்டு அமைப்புக் குழுவின் மக்கள் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு)

## முதலைகளைக் காப்பாற்ற தமிழகத்தில் திட்டம்!

சென்னை, நவ. 9

தமிழ்நாட்டில் முதலைகளைக் காப்பாற்றப் புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

முதலைகளின் எண்ணிக்கை குறைந்துவருவதைத்தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரிசா, உத்தரப்பிரதேசம், ஆந்திரா, பீகார், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலும் முதலைகளைக் காப்பாற்றும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரிஸா உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கு)

## "பயிற்சிக் கல்லூரிக்கு ஆசிரியர்களைத் தெரிவதில் வரவேற்கத்தக்க மாற்றம்"

### தமிழாசிரியர் சங்கச்செயலாளர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் முறையில் வரவேற்கத்தக்க மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் பல ஆசிரியர்கள் பலனடைய வழி பிறந்திருக்கிறதெனவும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் நம்பிக்கை தெரிவித்தார்.

மாஜிக்கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜயரட்ன முப்பது வீதம் சேவை மூப்பிலும் 55 வீதம் மாவட்ட அடிப்படையிலும், 15 வீதம் கஷ்டப் பிரதேச அடிப்படையிலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் திட்டம் ஒன்றைப் புகுத்தி இருந்தார். இத்திட்டம் மாவட்டங்களில் ஜன விகிதாசார முறையில் அமுல் நடாத்தப்பட்டமையினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள மாவட்டங்களில் சேவைசெய்த தமிழர் ஆசிரியர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திருந்தது. இவ்விடயம் மாஜி அமைச்சருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட பொழுதும் எவ்வித மாற்றத்தையும் கல்வி அமைச்சர் செய்யவில்லை எனினும் இத்திட்டத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை நன்கு உணர்ந்த புதிய கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா, இத்திட்டத்தை கைவிட்டு சேவைமூப்பின் அடிப்படையிலேயே ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்படி உத்தரவிட்டுள்ளார் என்றும் புதிய கல்வி அமைச்சரின் இந்நல்ல நடவடிக்கையை இலங்கைத் தமிழர் சங்கம் பாராட்டுகின்றது என்றும் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (கு)

## திடீர் பாதிப்பு!

(புலோலி)

பருத்தித்துறைத் தபாற் கந்தோரில் இயங்கி வந்த வானொலித் தொலைபேசி தடீரென்று திருப்பி எடுக்கப்பட்டதால் இப்பகுதி மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரே இவ்வானொலித் தொலைபேசி பருத்தித்துறைத் தபாற் கந்தோரில் பொருத்தப்பட்டிருந்தது.

இத்தொலைபேசி இணைக்கப்பட்டதனால் பொது மக்கள் அவசரத் தந்திகளையும், செய்திகளையும் அனுப்புவதற்குப் பெரும் உதவியாக இருந்தது.

ஆனால் கடந்தவாரம் இவ் வானொலித் தொலைபேசியைத் தொலைபேசித் திணைக்களம் திருப்பி எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நோயின் கொடுமை தாங்காது இளைஞர் தற்கொலை

(புலோலி)

நோயின் கொடுமையால் கிணற்றுக்குள் விழுந்து இறக்கப் போவதாக அடிக்கடி தாயிடம் கூறிவந்த இளைஞரொருவர் இறுதியில் கிணற்றையே தஞ்சமடைந்தார்.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த அல்வாய் வடக்கிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கந்தன் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 23) என்பவரே கிணற்றுள் விழுந்து இறந்தவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான மரண விசாரணையை வடமாராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வேலுப்பிள்ளை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் சேனபண்டா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவரது தாய் வள்ளியம்மை சாட்சியமளிக்கையில் சொன்னதாவது; இறந்தவர் எனது மகன். இவர் சலவைத் தொழில் செய்து வந்தார். கடந்த சில காலமாக அவர் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர் அடிக்கடி எனக்கு தான் கிணற்றுள் விழுந்து இறக்கப்போவதாகச் சொல்லி வந்தார்.

சம்பவ தினத்திற்கு முதல் நாள் எனக்கு சற்று சுகயீனமாக இருந்தது. எனவே அவர் எனக்குச் சோடா வாங்கி வருவதாகக்கூறிச்சென்றார். அன்று வீடு திரும்பவில்லை. மறுநாள் கிணற்றுக்குள் பிரேதமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

இதனையடுத்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## இளைஞர் சேவைமன்ற சிரமதானம்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரின் கோட்டை கட்டிய குளம் பகுதி இளைஞர் சேவை மன்றம் கடந்தவாரத்திலிருந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. நீர்ப்பாசன வாய்க்கால்கள், நீரோடைகள் என்பவை துப்புரவு செய்யப்பட்டு விவசாயிகளின் நீர்ப்பாசனப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் நோக்கமாக இப்பகுதி யுவதிகளும் இளைஞர்களும் பெருமளவில் கலந்துகொண்ட இவ்வைபவத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் திரு. சு. சாத்தியும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. மு. கார்த்திகேசுவும் கலந்துகொண்டு சிரமதானப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர். இவ்வாரமும் சிரமதானம் தொடர்ந்து நடைபெறும். (அ)

தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்த பயமுறுத்தல்

# சோவியத் - போலந்து ராணுவங்கள் உஷார்நிலையில்

## எந்தநிலையையும் சமாளிக்ககூட்டாகபயிற்சி

வார்சாவ், நவ. 9

போலந்தில் தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளதைத்தொடர்ந்து அங்கு ஆயுதப்படைகள் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

வேலைநிறுத்தத்தால் ஏற்படும் எந்தவொரு நிலையையும் சமாளிக்கக்கூடிய விதத்தில் அங்குள்ள சோவியத் துருப்புகளுக்கும் போலந்து ராணுவத்தினருக்கும் கூட்டாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

போலந்திலிருக்கும் சுமார் 30 ஆயிரம் சோவியத் துருப்புகளும் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர்.

போலந்திலுள்ள சுதந்திர தொழிற்சங்கம் சிலகோரிக்கைகளை முன்வைத்து ஒரு வாரத்தில் வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளது. (கு)

புதுடில்லியில் உள்ள

## அமெரிக்க -- பிரிட்டிஷ் தூதரகங்களில் வெடிகுண்டு?

### அநாமதேய தொலைபேசித் தகவலை அடுத்து பாதுகாப்பு

புதுடில்லி, நவ. 9

புதுடில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்திலும் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயத்திலும் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த அநாமதேயத் தொலைபேசித் தகவலை அடுத்து இரு தூதரகங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ராய்ட்டர் அலுவலகத்திற்கு ஆங்கிலமொழியில் கிடைத்த இத்தொலைபேசித் தகவலில் தூதரகங்களில் வைக்கப்பட்ட வெடிகுண்டுகள் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களில் வெடிக்கும் என்றும் இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்யவேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## காளி கோவில் தேர்த்திருப்பணி இன்று ஆரம்பம்

யாழ் - வண்ணை - கன்னாபிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகஇருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த விஸ்வப்பிரம்பஸ்ரீ சோமலக்ஷ்மண ஸ்தபதியால் இச்சித்திரத்தேர் உருவாக்கப்படவிருக்கிறது.

## அருணோதயா வி. க. சாம்பியன்

(மன்னார்)

முருங்கன் இளைஞர் முன்னேற்றக்கழகம் மக்கள் வங்கியுடன் இணைந்து நடாத்திய கரபந்தாட்டப் போட்டியில் பரிகாரிகண்டல் அருணோதயா விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்று சாம்பியனாகியது.

இப்போட்டியின்போது பிரதம விருந்தினர்களாக மூதூர் எம். பியும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். ஈ. எச். மஹ்றூப், மன்னார் எம். பி. திரு. பி. எஸ் சூசைதாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். வெற்றிபெற்றவர்களுக்கு திரு. சூசைதாசன் பரிசில்களை வழங்கினார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அயராத உழைப்பும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமேவாழ்க்கையைப் பயனுள்ளதாகவும் புகழ்நிறைந்ததாகவும் மிளிரச்செய்பவை என்பது மிகையாகாது

—ஹாமில்டன்.

# “அபிவிருத்திச்சபை அரசியல் தீர்வல்ல; உள்ளூராட்சிச் சபையின் விஸ்தரிப்பே”

## ஒட்டுசுட்டானில் ‘அமிர்’ விளக்கம்

(ஒட்டுசுட்டான்)

“மாவட்ட அபிவிருத்திச் சபைச்சட்டம் ஒரு அரசியல் அமைப்புச் சீர்திருத்தமல்ல. இது ஒரு உள்ளூராட்சிச் சபை விஸ்தரிப்பு. தமிழ் ஈழத்திற்குப்பதிலாக இதை நாம் ஏற்றுக்கொண்டோமென்று கூறுவது தவறு. ஒரு சுதந்திர சமதர்ம தமிழ் ஈழக் குடியரசை நிறுவ கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் எமக்கு இட்ட கட்டளையிலிருந்து நாம் ஒருபோதும் மாறமாட்டோம். இதற்காகவே பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராடி வருகிறோம்”.

மேற்கண்டவாறு முத்துஐயன்கட்டு வலதுகரை இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை சம்பந்தமான கருத்தரங்கில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித்தலைவர் என்ற ரீதியில் இப்பகுதிக்கு முதல் தடவையாக விஜயஞ் செய்த திரு. அமிர்தலிங்கத்திற்கும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்திற்கும் குதூகலமான வரவேற்பளிசகப்பட்டது.

முத்துஜயன்கட்டுவலதுகரை மேற்கு கிராமஅபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு ஆர் பசுபதி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டதாவது:

### பாதகமானவற்றை எதிர்த்தோம்

“அரசாங்கம் கொண்டுவரும் நல்ல சட்டங்களை ஆதரிப்பதோடு எமக்குப் பாதகமானவற்றை எதிர்த்தும் வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்முறையை மாற்றியமைக்கும் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்த போது எமது இனத்திற்குப் பாதகமான சிலபகுதிகளை நீக்கி சில திருத்தங்களுடனேயே அதை ஆதரித்தோம்.

“மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி, பயங்கரவாத தமிழ் இளைஞர்களை அடக்கச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது மந்திரியாலக்சணக்கில் பாராளுமன்றத்தில் வாதாடி சிங்களத் தலைவர்களின் கூச்சுலுக்கு மத்தியில் இச்சட்டத்தை மாற்றியுள்ளோம்.

“உண்மை இப்படி இருக்கும்போது சில பாதகங்களுக்குமுன் கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டத்தை ஆதரித்ததை வைத்துக்கொண்டு, அரசாங்கத்தோடு சேர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் இராசதுரை, தொண்டமான், தேவநாயகம் போன்றோருக்கும் கூட்டணி எம். பிக்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறார்கள் சிலர்.

### எதிர்த்து வாதிட்டோம்

பன்னிரண்டு ஆண்டுகள் இந்த நாட்டின் பிரதமராக வருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைப் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கும், ஏழு ஆண்டுகள் அவரின் குடியுரிமையை நீக்குவதற்குமான தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது கூட்டணி எம். பிக்களாகிய நாம் அத்தீர்மானத்தைக் காரசாரமாக எதிர்த்து வாதிட்டோம்.

“ஆனால் இந்தத் தமிழ் அமைச்சர்களால் அது முடியாது, அவர்களது மனச்சாட்சி உறுத்தினாலும் தமது எதிர்க்கருத்தை அவர்கள் பகிரங்கமாக வெளியிடமுடியாது. அப்படி வெளியிட்டால் அவர்களின் பதவி பறிபோய்விடும். இதுதான் அவர்களுக்கும் எங்களுக்குமுள்ள வித்தியாசம்.

### யாருக்கும் பயப்படவில்லை

“நாம் யாருக்கும் பயப்படாமல் நீதியை நிலைநாட்டப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராடி வருகிறோம். ஸ்ரீமாவோ தமது பன்னிரண்டு வருட பதவிக்காலத்தில் எம்மை மூன்று தடவைகள் சிறையில் தள்ளியுள்ளார். இருந்தும் இன்று அவருக்கு அநீதி இழைக்கப்பட்டபோது நாம் நீதிக்காக வாதாடினோம் ஏனெனில் இதே நிலைமை நாளை கூட்டணி எம். பிக்களுக்கும் வரலாம்”.

(கு)



# மக்களைத் தவிக்க வைக்கும் வாழ்க்கைச் செலவு

தவிர்க்கக் கூடிய மரக்கறி மற்றும் மீன் விலை உயர்வும், பஸ், ரயில் கட்டணங்களின் மோசமான அதிகரிப்பும் இன்று மக்களைத் தவிக்க வைப்பதை அரசு உணரமுடியாதா?

பாவனையாளர் நியாயமான விலைக்கு மரக்கறி, மீன் வாங்கக் கூடியதாக, மரக்கறி விற்பனைத் திணைக்களமும், மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் ஸ்தாபிக்கப்பட்டன.

அவை எவ்வாறு இயங்கி வருகின்றன என வினவினால் ‘பிள்ளையார் பிடிக்க.......’ என்ற நாடோடி வாசகமே நினைவுக்கு வருகிறது.

இரண்டு ஸ்தாபனங்களும் ஒரேவித நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. ஊழலும், மோசடியும் தேவைக்கு மேலான தொழிலாளர்களும் இவ்விரு திணைக்களங்களையும் விழுங்கி வருகின்றன.

சாதாரண, நடுத்தர வருமானமுடைய மக்கள், தேவையான மரக்கறியையோ மீனையோ நியாயமான விலைக்குப் பெறமுடிகிறதா?

உற்பத்தியில் ஈடுபட்டுக் கடுமையாக உழைக்கும் தோட்டக்காரர், அபாயத்தை எதிர்த்து நடுக்கடலில் தொழில் புரியும் மீனவர் தக்கவருவாயைப் பெறுகிறார்களா?

மீனவரின் வாழ்க்கை ஓரளவுக்கு உயர்ச்சிபெற்றிருந்தபோதும் சாதாரண தோட்டக்காரர் பெரும்பான்மையர் ஏழைவாழ்விற்கே என்றும் அடிமையாகின்றனர்.

இவ்விரு பகுதியினரின் நலத்தை நசுக்கிவிடுகின்ற தரகர் தங்கள் முதலில்லா வியாபாரத்தில் முன்னேறுகின்றனர். திணைக்களத்தின் முக்கிய நோக்கம் தோல்வியடைகின்றது.

சந்தைப்படுத்தல், விநியோகம் இவ்விரு முறைகளை அடிக்கடி பரிசீலனை செய்வதே அமைச்சின் கடமையாயிருக்கின்றது. ஊழல்கள் வெளியாகின்றன. அவற்றுக்கு நிரந்தரப் பரிகாரம் கிடைப்பதில்லை. முடிவு: பாவனையாளர்கள் ஆனைவிலை கொடுத்து அழுகிய பொருட்களை வாங்கும் நிர்ப்பந்தம்.

நாளுக்குநாள் வியாபாரத்திலும், வெளிநாட்டிலிருந்தும் இங்குவரும் பணத்தைக்கொண்டு எந்த விலைக்கும் எப்பொருளையும் வாங்கும் வசதியுள்ளவர்கள் வாழமுடிகிறது. ஏனையோர் கதியென்ன?

நாட்டின் நாலுபக்கமும் கடல், மீன்பிடிக்கும் வசதிகள் பெருமளவில் அதிகரித்திருக்கின்றன. ஆயினும் நடுத்தரமக்கள் கனவிலும் நினைக்க இயலாத விலை.

‘நரகத்தின் வாசற்படிகள் நல்லநோக்கங்களால் அமைக்கப்பட்டன’ என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. நாட்டின் இன்றைய ஆட்சி இதற்கொரு நல்ல உதாரணம். நாற்றம் பிடித்த மீனையும், வாடி வதங்கி அழுக ஆரம்பிக்கும் மரக்கறியையும் வாங்கும் வசதி சில வேளைகளில் பொதுமக்களுக்குக் கிடைக்கும். இதற்கும், எரிபொருள் விலையேற்றத்திற்கும், சர்வதேச பணவீக்கத்துக்கும் என்ன தொடர்பு?

பணவீக்கம் வேறு, நிர்வாகப் பலவீனம்வேறு. முந்தியது சர்வதேச ரீதியில் தவிர்ப்பது கடினம், பிந்தியது இன்று மக்களைத் தவிக்கவைக்கின்றது. இதற்குத் தக்க சான்று அளிக்க போக்குவரத்துத்துறை முன் வருகின்றது.

பட்ஜட்டிற்கு முன்னரே பஸ், ரயில் கட்டண உயர்வு டடிப்படியாக அறிவிக்கப்பட்டது இந்தஉபாயம் அரசின் விவேகத்தையும் அனுதாப உணர்வையும் விளக்குகின்றது. பயணஞ் செய்வோர் பலர் இன்று இருதய நோயாலும் மனநோயாலும் தாக்குண்டவர்கள். பட்ஜட்டில்தான் அபாயமான விலை உயர்வுகள் அறிவிக்கப்படும் என்ற பழைய மரபில் பழகியவர், இப்பயங்கர செய்தியைக் கேட்டு மயங்கி விழாமல், ஏற்கனவே இந்த அபாயச்சங்கு முகாரி இராகத்தில் ஊதப்பட்டது.

10சதமாக ஒரு காலம் இருந்த பஸ் கட்டணம் இன்று 80 சதமாகிவிட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போகவேண்டுமானால் 35ரூபாய் வேண்டும். பஸ், ரயில் எதிலும் முழுத்தூரமும் நின்று கொண்டு நெரிபட்டுப் போகத் தயாராக இருக்க வேண்டும்

இந்த அநியாயமான நிலை முற்றுகச் சர்வதேசஎரிபொருள் அதிகரிப்பால் உண்டானதா?

இலங்கை மத்தியபோக்குவரத்துச்சபையின் 6000 பஸ்வண்டிகளில் சென்ற பங்குனிமாதம் 4749 வண்டிகள் பழுதடைந்து படுத்துவிட்டன. இவற்றைப் பழுது பார்க்கும் பொறியியல் பகுதி எவ்வித திறமையுமின்றி ஊசலாடுகின்றது. ம. போ. சபையின் நிர்வாகத்தினர் எவ்வித திறமையுடையவர்களாயிருந்தும், போக்குவரத்து விவகாரங்கள் எதுவும் அறியாத ஆன்மாக்கள்.

ம. போ. சபை ஊழியர்களின் ஒழுங்குக் கட்டுப்பாடுபற்றி அறியாதவர் அறிவில்லாரே. வேலையற்றவர்களுக்கு வேலை வழங்கும் வள்ளன்மை நிலவும் ஸ்தலம் ம. போ. ச. மொத்தவிளைவு 68 கோடி ரூபா நஷ்டம். இதனை வேறெவரின் தலையில் சுமத்துவது.?

பாவம் அப்பாவிப் பிரயாணிகள்! அவர்களின் பாவம் இதற்குப் பொறுப்பான அரசு.

# தற்காலிக அதிபர் பதவி

19-09-80ம் திகதிய வர்த்தகமானியில் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் செயலாளரால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் 20 சிங்களப் பாடசாலைகளுக்கும், 3 தமிழ்ப்பாடசாலைகளுக்கும் அதிபர் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இம்மூன்று தமிழ்ப்பாடசாலைகளும் என்ன திட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது என்பது எவருக்கும் தெரியாத புதிராக இருக்கின்றது. நாட்டில் பலபாடசாலைகளில் அதிபர் பதவிக்கு வெற்றிடங்கள் இருக்கும்போது ஒருசில பாடசாலைகளை மாத்திரம் குறிப்பிட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, சோபாஸ்கந்தாக் கல்லூரி,



மட்/புனித மில்சேல் கல்லூரி போன்ற பல பாடசாலைகளில் அதிபர் பதவி பல வருடகாலமாக வெற்றிடமாக இருந்தும் இப்பாடசாலைகளைத் தவிர்த்துவிட்டு அதிபர் பதவி சில மாதகாலமாக மாத்திரம் வெற்றிடமாகவுள்ள 3 தமிழ் பாடசாலைகளை மாத்திரம் கல்விச்சேவைக்குழு தெரிந்து எடுத்தமை கவலைக்குரியது.

பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாக இருக்க, இவ் இருபத்திமூன்று பாடசாலைகளின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டபடியினால், இப்பாடசாலைகளிலுள்ள தற்காலிக அதிபர்கள் அப்பதவிகளுக்குக்கூடத் தகுதியில்லையென கல்விச் சேவைக்குழு வர்த்தமானியில் பிரசுரம் செய்துகாட்டியுள்ளதால் அவர்களின் சுயகௌரவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளை மாத்திரம் குறிப்பிட்டமையினால் இப்பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ... தற்காலிக அதிபர்கள் அப்பதவிக்கு தகுதியற்றவர்களென பகிரங்கமாகக்கூறும் நிலையேற்பட்டிருப்பதோடு தற்காலிக அதிபரின் கட்டளைகளை ஏற்கக்கூட மறுப்புத் தெரிவிக்கும் சூழ்லைகள் உருவாகிக்கொண்டு வருகின்றது.

விளம்பரப்படுத்தப்பட்ட 23 பாடசாலை அதிபர் பதவிகளை இடமாற்றத்தின்மூலம் நிரப்பி முடித்துவிட்டால், வேறு இருபத்துமூன்று பாடசாலைகளின் அதிபர் பதவிகள் வெற்றிடமாக வருகின்றதை கல்விச் சேவைக்குழு, கவனத்திற் கொள்ளவில்லையா? பின்னர் அப்பாடசாலைகளின் அதிபர் பதவிகளை நிரப்ப பிறிதொரு முறை கல்விச் சேவைக் குழு வர்த்தமானியில் பிரசுரிக்கப் போகின்றதா? அவ்வாறுதான் பிரசுரித்துக்கொண்டு சென்றாலும் எந்தக் கட்டத்திலும் சகல பாடசாலை அதிபர் பதவிகளையும் இடமாற்றத்தின் மூலம் நிரப்பிவிடமுடியாது.

காலி, மாத்தறை, பசறை, யாழ்ப்பாணம் போன்ற நாட்டில் பரந்துகிடக்கும் பாடசாலைகள் ஒவ்வொன்றின்றிற்கும் யாரை அதிபராக நியமிப்பது எனத் தீர்மானிப்பது கொழும்பிலுள்ள கல்விச்சேவைக்குழுவிற்குமிகவும்கடினம். கொழும்பிலிருந்துகொண்டு மாத்தறைப் பாடசாலையின் சூழ்நிலைகள், சிக்கல்கள் என்பனவற்றை மனத்திற் கொள்ளாது அதிபர் நியமனம்செய்ய நேரிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளையும் கல்விச் சேவைக்குழுவே பொறுப்பேற்கவேண்டும். அவ்விளைவுகளை தீர்க்கும் பொறுப்பை பின்னர் கல்விப் பணிப்பாளர்கள் கவனித்துக்கொள்வார்களெனக் கல்விச் சேவைக்குழு கருதக்கூடாது.

நீண்டகால அனுபவத்தால் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி நிர்வாகத்தில் பெரும் மாற்றங்களைச் செய்யும்போது கல்விச் சேவைக்குழு நன்குசச் சிந்திக்கவேண்டியது மிகவும் அவசியம்.

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்.
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.

## விசேட பஸ் சேவை

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ நெல்லியடியிலிருந்து தொண்டமனாற்றிற்கு புதிய விசேட பஸ் சேவையொன்றை ஆரம்பித்துள்ளது.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு கந்த சஷ்டி விரதத்தினை அனுஷ்டிக்கச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி இவ்விசேட சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(கு)

## வரத் தாமதம் ஏன்முருகா?

—குறிஞ்சி—

தீயனும் சூரனால் தேவரெல்லாம் — வெய்ய
சிறையிலே நொந்திடும் வேளையிலே
தூயவா வேலவா நீவெகுண்டு — தேவர்
துயரினைத் தீர்த்திட வேலெடுத்து
மாயையின் மைந்தனைக் கூறுபடச் — செய்து
மயிலொடு சேவலாய் ஆக்கிவைத்த
ஆயநாள் இன்றதில் உன்னையொன்று — கேட்க
அழகனே நானுனை நாடிவந்தேன்.

சூரனைப் போலவே இங்கெனக்கும் — நெஞ்சின்
தூய்மையைச் சிறையிடும் ஓர்அசுரன்
பாரினர் அவன்பெயர் மாயையென்பார் — அந்தப்
பாவியின் பிடியிலே பாவை நெஞ்சம்
ஆருளர் நீயலால் வேறெனக்கு? — எந்தன்
அப்பனே என்னுளம் காப்பதற்கு
கூரிய நின்வடி வேலொடுவா — வந்து
கொடிய அம் மாயையைச் சாய்த்தருள்தா.

தேவரைச் சிறையிலே வைத்தவனை — மாய்க்க
தீச்சுடர் வேலொடு வந்ததுபோல்
பாவிஎன் மாயைகள் தீர்த்தருள — ஞான
வேல்சுமந்து இன்றுநீ வாவெனவே
ஆவலால் நீயமர் குன்றடியில் — நின்று
ஐயனே உந்தனை நான்அழைத்தும்
நீவரத் தாமதம் ஏன்முருகா — உந்தன்
மாமலை ஏறியே நான்வரவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மக்களிடையே இலக்கிய ரசனை குன்றிவருகிறது"

(அரியாலை)

"செய்யுள் இலக்கியமும், உரைநடை இலக்கியமும் இலக்கியங்கள்தாம். உரைநடை இலக்கியத்தில் சிறுகதைகள், நாவல்கள், மட்டுமன்றி கட்டுரைகளும் இலக்கிய அந்தஸ்தைப் பெறுகின்றன. இலக்கியத்தைப் படித்து ரசிக்கும் மனப்பாங்கு எல்லோரிடத்திலும் காணப்பட்டாலும் பொதுவாக இலக்கிய ரசனையுள்ளவர்கள் குறைவென்றே கூறலாம்" என்று ஆசிரியர் திரு. எஸ். முத்துலிங்கம் யாழ் பரி யோவான் கல்லூரி பீற்றேர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "இலக்கிய இன்பம்" என்ற பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "வேறுபல விஷயங்களில் தமது கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பதால் இலக்கியத்தில் தாம் நேரடியாக ஈடுபடப்போதிய அவகாசம் இல்லை யென்று கூறுகின்ற பலரை நாம் இன்று காண்கின்றோம். இவர்கள் தமக்குக் கிடைக்கும் சொற்ப நேரத்திலாவது புகழ் பெற்ற எழுத்தாளர்களின் இலக்கியங்களில் சிலவற்றையாவது படிக்க முன்வர வேண்டும்" என்றார். (அ)

# 'எதிரியின் தமையனின் கொலைக்கும் எனக்கும் தொடர்பில்லை'

## நெல்லியடி கொலைமுயற்சியில் குத்துப்பட்டவர் சாட்சியம்

(புலோலி)

"டக்கென்று ஒரு சத்தம் கேட்ட மறுகணம் கத்தி எனது உடலில் பாய்ந்தது. குத்து விழுந்ததும் கத்தியிருந்த கையைப் பிடித்துக்கொண்டு எதிரியைத் தள்ளிவிட்டு கடையின் புற மதிலால் ஏறி ஆனந்தராசா வீட்டிற்குள் பாய்ந்தேன்."

இவ்வாறு நெல்லியடியைச் சேர்ந்த கணேசு கனகரத்தினம் கொலை முயற்சி வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கனகரத்தினம் குறிப்பிட்டார்.

கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த கணேசு கனகசுந்தரம் என்பவரைக் கடந்த மே மாதம் 31-ம் திகதி கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சித்ததாக கரவெட்டியைச் சேர்ந்த விசுவலிங்கம் தர்மலிங்கம் (சோதி) என்பவர் மீது குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். பகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

எதிரி சார்பில் சட்டத்தரணி என். கிருஷ்ணராசாவும், பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணி ஜெயசிங்கமும் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த கனகசுந்தரம் குறிப்பிட்டதாவது:

கடந்த 31-05-80 எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. அன்று குருநகருக்கு வேலைக்குச் சென்றுவிட்டு இரவு 8 மணி போல் பஸ்ஸில் நெல்லியடிக்கு வந்தேன். நான் பஸ்ஸால இறங்கிச் சென்ற போது 1-ம் எதிரியும், இன்னுமொருவரும் என்னைத் துரத்திக்கொண்டு வந்தார்கள் துரத்திக்கொண்டு வந்த மற்றவரை எனக்குத் தெரியாது.

நான் அப்போது அருகில் இருந்த நிசாமின் கடைக்குள் புகுந்தேன். அந்தக் கடைக்குள் அன்று இருந்தவர் இன்று எனக்குச் சாட்சியாக வரும் மனோகரன் என்பவர்.

நான் கடைக்குள் புகுந்ததும் சிகரெட் 'கேட்டேன். அப்போது எதிரி ஓடிவந்து, எனது வயிற்றில் குத்தினார். நான் உடனே கடைக்குப் பின்னால் ஓடி ஆனந்தராசாவின் வீட்டின் மதில் மேல் ஏறிக் குதித்து எனக்கு கத்தியால் குத்தப் பட்ட சம்பவத்தை எனது வீட்டுக்கு அறிவிக்கும்படி சொன்னேன். இதனையடுத்து ஆனந்தராசா வீட்டுக்கு வந்து எனது வீட்டுக்காரர்கள் என்னை லொறியில் ஏற்றிக்கொண்டு மந்திகை அரசினர் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து நான் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டேன். யாழ். ஆஸ்பத்திரியில் 28 நாட்களும், பின்னர் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் 11 நாட்களும் இருந்தேன்.

நான் கடையில் காசாளர் பட்டடையில் நிற்கும் போது தான் எனக்குக் குத்து விழுந்தது. அதாவது கடையினுள். அந்தக் கடையில் அதிகம் ஆட்கள் நிற்கவில்லை. கடையின் பின்பக்கம் ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

நான் காசாளருக்குக் கிட்டச் சென்று விட்டேன், எனக்கும் எதிரிக்கும் இடையில் மேசை ஒன்றிருந்தது அந்த மேசையைத் தாண்டித்தான் எதிரி என்னை எட்டிக் குத்தினார். எதிரி மேசைக்கு அடுத்த பக்கத்தில் நின்றுதான் எட்டிக் குத்தினார். எதிரியுடன் கூட வந்தவர் கடைக்குள் வரவில்லை.

கனகசுந்தரம் மேலும் தெரிவிக்கையில்; இந்த எதிரியை எனக்கு, 15, 16வயது தொடக்கம் தெரியும். இந்த எதிரியின் தமையன் சித்திரபுத்திரன் 3, 4 மாதங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டார் என்பது எனக்குத் தெரியும். அந்தக் கொலைக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றார்.

யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தனும் சாட்சியமளித்தார்.

# "அத்தானின் குடல் வெளியே வந்தது"

(புலோலி)

"அத்தானுக்குக் குத்து விழுந்த சம்பவம் கேட்டு ஆனந்தராசா வீட்டிற்கு ஓடிய போது அங்கு அத்தான் கத்தியால் குத்தப்பட்டு குடல் வெளியில் வந்த நிலையில் கிடந்தார்" என்று நெல்லியடி கணேசு கனகரத்தினம் கொலை முயற்சி வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கணபதிப்பிள்ளை தேவமனோகரன் குறிப்பிட்டார்

விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த தேவமனோகரன் குறிப்பிட்டதாவது:

சம்பவதினமான 31-5-80 இரவு நான் வீட்டில் நித்திரையிலிருந்தேன். அப்போது என்னைத் தட்டி எழுப்பிய அம்மா அத்தானுக்கு குத்து விழுந்துவிட்டது என்று கூறினார்.

நான் உடனே எழும்பி ஓடியபோது வீதியில் ஆனந்தராசா நின்றார். அவர் அத்தான் தன்னுடைய வீட்டில் தான் கிடப்பதாகச் சொன்னார். நான் உடனே அவரது வீட்டிற்குச் சென்றேன். அங்கு அத்தான் குடல் வெளியே வந்த நிலையில் அனுங்கிக் கொண்டிருந்தார். அவர் என்னைக் கண்டதும் தண்ணீர் கேட்டார். ஆனந்தராசவின் மனைவி கோப்பி கொடுத்தார்.

அத்தான் தனக்குச் சோதி குத்திவிட்டார்என்றும் தன்னை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் சொன்னார்.

அவரை லொறியில் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். பின்னர் அங்கிருந்து காரொன்றில் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம் என்றார்.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 25ம் திகதி

திங்கட்கிழமை

(10-11-80)

மேடம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அந்நிய நண்பர் ஒருவரால் ஏமாற்றமடையக் கூடும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக் கூடும்

இடபம்: காதலர் வாழ்வில் திருப்பான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. எதிர்பாராத வழிகளில் பொருளும் வந்து சேரும்

மிதுனம்: நினைத்தது இன்று நடக்காது எதிர்பார்த்த இடங்களில் தடைகள் ஏற்பட்டுவரும் நண்பர்களின் நச்சரிப்பு வேதனையைத் தரலாம். அவசரப்போக்கைத் தவிர்க்கவும்.

கடகம்: தன்மான மிகுதிக்கும் தனவரவிற்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் உண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். தந்தைவழியால் சுகமும் உண்டு

சிங்கம்: மனதில் புதிய எண்ணம் தலைதூக்கும். தொழிலில் துரித முன்னேற்றம் காணப்படும். பொதுமக்களின் தொடர்புகள் பெருகும்.

கன்னி: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவிற்கு இடமுண்டு. பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம். வெளியூரில் இருந்து செய்தியும் கிடைக்கும்

துலாம்: வாய்வுக் கோளாறு உடல் நலனைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் கவனம் வேண்டும். தொழில்துறையில் கவலைகள் தோன்றக்கூடும்.

விருச்சிகம்: மனக்கோட்டை இன்று மணல் கோட்டையாக மாறும் .இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். அபாயமான காரியங்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு: அதிகாரப் பேறிற்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு. குடும்பத்தில் அதிக மகிழ்ச்சிநிலவும் வசீகரப் பேச்சின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து கொள்வீர்கள்.

மகரம்: அதிக சிந்தனை தலையிடியைக் கொடுக்கும் நிதியில் முடக்கநிலை காணப்படும். பூமிப்பிணக்கு தலைகாட்டக் கூடும். இன்று சுகாதரமாய் நடப்பது நன்று

கும்பம்: விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். சிலருக்கு வாகன விருத்திக்கும் இடமுண்டு கல்வியில் ஆர்வம் பிறக்கும் தாய்வழிச் சுகமும் உண்டு

மீனம்: அறவழியில் நாட்டம் பிறக்கும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# இடமாற்றம்...

6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்குழு அவ்வாசிரியர்களின் ஆத்ம சாந்திக்காக இரு நிமிட அஞ்சலி செலுத்தியதோடு. எதிர்காலத்தில் இவ்விதமான பரிதாபகரமான சம்பவங்கள் நடைபெறுதிருக்கக் கூடியதாக கல்விச்சேவைக்குழு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது

இக்கூட்டத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தின் போது உயிரைத் தியாகம் செய்த சோமபாலா, அமரத்துவம் எய்திய தொழிற்சங்கவாதிகளாகிய நித்தியானந்தன், மாஜி செனட்டர் யேசுதாசன், தமிழறிஞர் வண பிதா தனிநாயகம் அடிகளார் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காகவும் 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

(கு)

# சமத்துவம்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டி அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவில் இம் மாதம் 21ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறவிருக்கிறது.

பிரார்த்தனை முடிவில் சாதி சீதனப் பேய்களின் கொடும் பாவிகள் எரிக்சப்படும். இப் பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொள்ளும்படி பல சமூக சேவை ஸ்தாபனங்களுக் அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன. (அ)

# வீரம் பேசுவதை விடுத்து....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாற்ற நான் என்றும் உழைத்துவருவேன்.

"அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் நாம் கலந்துகொண்டால் தப்பபிப்பிராயம் பரப்பப்படுகிறது. கிழக்கு மாகாணம் இன்றுள்ள நிலையில் அமைச்சர்களைச் சந்தித்துப் பல விஷயங்களைச் சாதிக்கவேண்டியநிலையில் நாம் நிற்கிறோம். அநீதிகள்இழைக்கப்படும்போது அதைத் தடுக்க அமைச்சர்களைச் சந்திப்பதும் தவிர்க்கமுடியாதது. இதனை மக்கள் தப்பாக எண்ணக் கூடாது. இம்மியளவும் கொள்கையிலிருந்து விலகாது செயல்படும் எம்மீது களங்கம் கற்பிக்கச் சிலர் முயல்வது வேடிக்கையாக உள்ளது".

## சிவசிதம்பரம் பேச்சு

தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், அமரர்கள் வன்னியசிங்கம், திருச்செல்வம், தந்தை செல்வா, மற்றும் திரு. அமிர்தலிங்கம் போன்றோர் ஒரே பாசறையில் வளர்ந்தவர்கள். ஆனால் நான் எதிர்ப்பாசறையில் வாழ்ந்தவன், அப்போது நாம் ஒருவரைபொருவர் திட்டித்தீர்த்து கிடைக்கும் சலுகைகளுக்குப் போட்டிபோட்டு, கிடைக்கக் கூடியவற்றையும் கிடைக்காமற்செய்தோம். அதே சரித்திரம் இன்று திரும்பிவருகிறதா எனச் சிந்திக்கவேண்டியுள்ளது. எம்மிடையே பிரிவுகள் ஏற்படுவதுபலவீனத்தைத் தருமேதவிர பயன் எதுவும் தராது. மாவட்ட அபிவிருத்திச்சபைமூலம் எதுவும் செய்ய முடியாதுபோனால் அதனைத் தூக்கி எறியவும் நாம் தயாராக உள்ளோம்" என்றார்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்:

## "தியாகிகளையும் திட்டுகிறார்கள்"

— அமிர்

அரசியலில் அமரர் வன்னியசிங்கப் காட்டிச்சென்ற பாதையில் செல்லும் நாம் எந்தக்கல்லெறிக்கும், பொல்லடிக்கும் பயப்படமாட்டோம். எம்மை நமே திட்டுவது தமிழினத்தின் சாபக்கேடாக இருந்து வருவதனையிட்டு நாம் கவலைப்படவேண்டியுள்ளது. பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களைக் கூட இன்று திட்டித்தீர்ப்பதில் சிலர் முன்னிற்கிறார்கள். தந்தை செல்வா, வன்னியனார் போன்றோர் இருந்தபோதுதிட்டியவர்கள் இறந்தபின் அஞ்சலிக்கூட்டம் நடத்துவதுபோல என்னை எப்போது திட்டுவோர் நான் இறந்தபின் அஞ்சலிக் [illegible] [illegible] ரூா. ( )

# நள்ளிரவில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

தொல்புரத்திலுள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த நகைகளையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று சங்கானை பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

தொல்புரம் மடத்துப் பிள்ளையார்கோவிலடியிலுள்ள அருணாசலம் கந்தையா என்பவரது வீட்டில் நேற்றிரவு இடம்பெற்ற இத்திருட்டில் 2 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும், 2 ஆயிரம்ரூபா பெறுமதியுள்ள காப்பும்திருடப்பட்டுள்ளதாக புகாரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக சங்கானை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. பிரேமதாசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை நடாத்தி வருகிறது. (கு)

# யாருடையவை?

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஆனந்தன் வடலி வீதியைச் சேர்ந்த திரு. கே. தவேந்திரன் என்பவரால் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகம் ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அந்நாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

0 0 0

தேசிய சேமிப்பு வங்கி பணவைப்புப் புத்தகம் ஒன்று வட்டுக்கோட்டை, அராலி மேற்கைச் சேர்ந்த திரு. எஸ். நாகேந்திரன் என்பவரால் யாழ் பிரதான வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம். (கு)

# "வேதாகமத்தில் கிறிஸ்துவைக் காணலாம்"

(அரியாலை)

'வேதாகமம் கிறிஸ்துவின் அன்பையும் நல்வழியையும் எமக்குக் காட்டுகிறது. வேதாகமம் முழுவதையும் நாம் கவனத்துடன் வாசிப்போமானல் அங்கே கிறிஸ்துவைக் காணலாம். அவரது வழிகாட்டல் இன்று உலகிற்கு மிக அவசியமாக வேண்டப்படுகிறது '

இவ்வாறு இலங்கை வேதாகம சங்க வட இலங்கைப் பிரதிநிதி சகோதரர் எட்வேட் சண்முகம் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற வேதாகம ஞாயிறை யொட்டிய ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர்கிங்டன் அடிகளார்தலைமையில் நடைபெற்றஆராதனைக்கூட்டத்தில் சகோதரர்எட்வேட் சண்முகம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

வேதப்பரப்புதலையே நோக்கமாகக் கொண்டு 1804-ம் ஆண்டில் பிரித்தானியாவில் அமைக்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இடமாற்றம் வழங்காததால் நான்கு ஆசிரியர்கள் பலி!"

## இ. த. ஆசிரியர்சங்கம் மௌனஅஞ்சலி

(மட்டக்களப்பு)

உடல் நலமின்மை காரணமாக இடமாற்றம் கோரியும் கல்விச் சேவைக்குழு இடமாற்றம் வழங்காதமையினால் மரணமடைந்த ஆசிரியர்களின் ஆத்ம சாந்திக்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிக்குழு இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தியது.

மட்டுநகர் புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்திலேயே இவ்வஞ்சலி செலுத்தப்பட்டது.

''கடந்த வருடம் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகளால் 'அஸ்மா' நோயை உறுதிப்படுத்தி வைத்திய சான்றிதழை சமர்ப்பித்து, உஷ்ண பிரதேசத்திற்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாகக் கல்விச்சேவைக்குழு எவ்வித அக்கறையும் செலுத்தாததால் இவ்வாறு விண்ணப்பித்த நான்கு தமிழ் ஆசிரியர்கள் கடந்த வருடத்தில் இறந்துவிட்டார்கள் நால்வரில் இருவர் தமக்கு இடமாற்றம் கிடைக்காவிடில் தாம் உயிரைக் கூட இழக்கவேண்டி ஏற்படும் என வும் கடிதம் எழுதியிருந்தார்களாம். ஆனாலும் கல்விச் சேவைக்குழு இவ்விடயங்கள் தொடர்பாக எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. இதனால் நான்கு ஆசிரியர்களின் உயிர் அநியாயமாக இழக்கப்பட்டது கல்விச்சேவைக் குழுவின் இம் மோசமான நிர்வாகத்தை வன்மையாகக் கண்டித்து ஆட்

(5-ம் பக்கம் பார்க்க)

# அன்னை திரேசாவுடன்சேர இலங்கைராஜதந்திரிவிருப்பம்

(கொழும்பு)

இலங்கை ராஜதந்திர சேவையைச் சேர்ந்த ஒரு பிரமுகர் அன்னை திரேசாவின் சமூக நலப் பணியில் சேர்ந்து பணிபுரிய முடிவு செய்துள்ளார்.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமை புரியும் இவர் டெயர் ஜே. போர்பஸ் என்பதாகும். நோபல் பரிசு பெற்றவரான அன்னை திரேசாவுடன் சேர்ந்து நோயாளிகள், ஏழைகள், வீடற்றவர்கள் போன்ற மக்கள மத்தியில் பணியாற்ற முடிவு செய்துள்ள இவர் தமது இந்த முடிவு பற்றி வெளிநாட்டமைச்சுக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

சமூக சேவையில அதிக அக்கறை கொண்ட இவர் மிகவும் அமைதியான மனிதர் என்று அவரது சகாக்கள் கூறுகிறார்கள்.

## பூவரசங்குளத்தில்

# புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்

(வவனியா)

''கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் இரணை இலுப்பைக் குளப்பகுதி மன்னார் மாவட்டத்துடன் சேர்ந்திருந்தது. கடந்த தேர்தலின் போதுதான் இது வவனியா தொகுதியுடன் சேர்ந்தது. தேர்தலில் நான் இப்பகுதிக்கு வறதபொழுது இந்தப் பகுதி பலவழிகளலேயும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்ததை நான் நேரில் கண்டேன். இதனை நிவர்த்தி செய்வதற்கு நான் எடுத்த முதல் நடவடிக்கை இப்பகுதியின் முழு நிர்வாகத்தையும் வவனியா மாவட்டத்துடன்இணைத்ததே. இதற்காக பூவரசங்குளத்தில் புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்து நடுச்செட்டி குளம் பகுதியில் இருந்து ஒரு பகுதியையும், செட்டிகுளம் பகுதியிலிருந்து ஒரு பகுதியையும், இரணை இலுப்பைக்குளம் பகுதியையும் இணைத்து இந்த அலுவலகம் நிர்வாகத்தில் ஈடுபடும். இதற்கான எனது சிபாரிசை உள்நாட்டு அமைச்சரும் ஏற்றுக்கொண்டதுடன் இவ்வலுவலகம் அடுத்தஆண்டு திறந்து வைக்கப்படவும் உள்ளது.

இவ்வாறு இரணை இலுப்பைக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் வவனியா எம்.பி திரு. தா. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இக்கூட்டம் வவனியா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். நாகராஜா தலைமையில்

(7-ம் பக்கம் பார்க்க)

# கிணற்றுக்குச் சிறுவன் பலி!

(பண்டத்தரிப்பு)

எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி மரணமான பரிதாப சம்பவம் இளவாலையில் நடைபெற்றுள்ளது.

கந்தர் மகாலிங்கம் என்னும் இச் சிறுவனின் மரண விசாரணைஅதிகாரியும் உத்தியோகப் பற்றற்ற நீதவானுமாகிய திரு.சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது. இத்தருணம் காலம் சென்ற சிறுவனின் மூத்த சகோதரியான உமாதேவி சாட்சியமளிக்கையில் தமது காலம் சென்ற தம்பி ஆடு ஒன்றை அவிழ்த்துக் கொண்டு கிணற்றடிக்குச் சமீபமாகசெல்லுகையில் கால் தடக்கி கிணற்றடியில் வீழ்ந்து விட்டதாகவும் தான் உடனே குளறிய சத்தத்தை கேட்டு அயலவர்கள் ஓடிவந்து கிணற்றில் இறங்கி அவரை வெளியே தூக்கியபோது அவர் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார். காலஞ்சென்ற சிறுவனின் தந்தை மாணிக்கம் கந்தரும் சாட்சியளித்தார்

விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. சாட்சிகளை சங்கானை பொலிசைச் சேர்ந்த திரு. பி. அபோத்தினு ஆஜர் செய்தார்.


# ரெபெக்கா லீ பாப்பாப் போட்டி

அன்புப் பெற்றோர் அனைவருக்கும் ஓர் அழைப்பு!

ரூ.50,000/-க்கும்

அதிக தொகையை உத்தரவாத சேமிப்பாக

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்டில்

பெறுங்கள்!



உங்கள் குழந்தைக்கே அதிர்ஷ்டம் அடிக்கலாம்!



மிகக் கவர்ச்சித் தோற்றமுள்ள குழந்தைகளை, (ஒரு குழந்தை மருத்துவ நிபுணர் உட்பட) பிரபல பிரமுகர்கள் கொண்ட நடுவர் சபை ஒன்றே தேர்ந்தெடுக்கும். நடுவர் சபைத் தீர்ப்பே முடிவானது. வெற்றி பெறும் குழந்தைகளுக்கு போட்டி முடிந்தவுடன் வழங்கப்படும் மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் முதலீட்டுப் பத்திரங்களை, 2 வருடங்களின் பின் காசாக்கலாம். இதற்கான வட்டி வழங்கப்படும். மாதாந்தம் எடுத்தால் 23% வட்டி. 2 வருடங்கள் எடுக்காமல் விட்டால் இறுதியில் 25% வட்டி. (வட்டி வரை விட்டால், முதலீட்டுப் பத்திரத்தின் பரிசுப் பணம் பெறுமதி 150% ஆக உயரும்!) புகைப்படங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், தொம்சன் அசோசியேட்ஸ் (சிலோன்) லிமிட்டெட் ஆகிய நிறுவன ஊழியர்களின் குழந்தைகள் இப் போட்டியிற் கலந்து கொள்ள முடியாது.

1-ம் பரிசு-ரூ. 20,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
2-ம் பரிசு-ரூ. 10,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
3-ம் பரிசு-ரூ. 5,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
15 ஆறுதற் பரிசுகள் – ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000/- க்கு முதலீட்டுப் பத்திரங்கள்.
முதலீட்டை எடுக்காமல் 2 வருடம் விட்டால் 25% வட்டி-அல்லது மாதாந்தம் 23% வட்டி.

6 மாதத்துக்கும் 2 வருடத்துக்கும் இடைப்பட்ட வயதுள்ள குழந்தைகள் பெருந் தொகைப் பரிசு பெறலாம். உங்கள் குழந்தையின் அஞ்சலட்டை அளவான புகைப்படத்தில், பின்புறம் குழந்தையின் பெயரை எழுதி, முறையாக நிரப்பிய விண்ணப்பத் தாளுடன் அனுப்புங்கள். ரெபெக்கா லீ பேபி பவுடர் கொள்கலத்தில் உள்ள குழந்தைப்படங்கள் இரண்டையும் இணைத்து அனுப்ப வேண்டும். எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொன்றையும் தனித் தனிக் கடித உறையில் அனுப்பவேண்டும். ஒரு குழந்தை ஒரு பரிசு மட்டுமே பெறலாம். வெற்றிபெறும் குழந்தைகளின் பெயர்களில், மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் வழங்கும் முதலீட்டுப் பத்திரங்களாகப் பரிசுகள் தரப்படும். உங்கள் விண்ணப்பத்தை:-

''ரெபெக்கா லீ பாப்பாப் போட்டி''
த. பெ. எண். 38, கொழும்பு:

என்ற விலாசத்துக்கு, 1980 டிசம்பர் 1ந் தேதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.




ரெபெக்கா லீ
இவ் வருடப் பாப்பாப் போட்டி

பெற்றோர்/பாதுகாவலர் பெயர்

விலாசம்

குழந்தையின் பெயர்

பிறந்த தேதி பெற்றோர்/பாதுகாவலர் ஒப்பம்

ரெபெக்கா லீ பேபி பவுடர் கொள்கலத்தில் வெட்டி எடுத்த இரண்டு குழந்தைப் படங்கள் இணைத்துள்ளோம்.

TAL—481



உங்கள் குழந்தைக்கு அன்னைப் பராமரிப்பை அளிப்பது ரெபெக்காலீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
எம். ஜி ஆர். —லதா
உலகம் சுற்றும் வாலிபன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
ராணி சம்யுக்தா
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சாவித்திரி - ஜெய்சங்கர்
ஐக்கம்மா

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Peter Cushing in
Dr. Who and the Daleks
(Scope-Color)
12-11-80 முதல் ஒரே வானம் ஒரே பூமி

அநேக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
இதுவரை பார்க்காதவர்களுக்கு இது அரிய வாய்ப்பு!
சாந்தி யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
மகத்தான 16-வது வெற்றி வாரம்!
நீயா? வெள்ளிவிழா வண்ணச்சித்திரம்

வெற்றி முழக்கமிடும் 6-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

75-வது நாளைநோக்கி வீறுநடைபோடுகிறது
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 7-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் டலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

WINDSOR
(JAFFNA) DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00&9-30P.M.only
தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறையில் 28 வருடங்கள் வாழ்கிறன் ஒரு கணவன். கணவனைச் சிறைக்கு அனுப்பியது பேரனின் சூழ்ச்சி என்பதை மனைவி உணர்கிறள், அன்பும், பண்பும் பதிபக்தியும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிறள். இருந்தும் வீரதீரசூரன் புறெண்சன் ஒருவனால் மாத்திரம் அவனை மீட்க முடிகிறது.
CHARLES BRONSON' ROBERT DUVALL,
JILL IRELAND
in
"BREAK OUT"
Jailed for a crime he never committed - Only Charles Bronson can get him out!
Adults. Color Action.


## புதிய....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து தம்மால் நிதி ஒதுக்கப்பட்டு, அதன் மூலம் கட்டி முடிக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

திரு. நா. சேனாதிராசா பேசுகையில், "இப்பாடசாலைக்கு 'யுனெவ்' நிறுவனத்தால் ஆசிரியர் விடுதி ஒன்று கட்டுவதற்கும் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இவ்வேலை கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன் இந்நிறுவனம் வானொலிப் பெட்டித் தளவாடங்கள் போன்றவற்றையும் வழங்கியுள்ளது. இது இந்தப் பாடசாலை ஆசிரியர்களின் முயற்சியாலும், கல்வி இலாகாவின் ஒத்துழைப்பாலும் கிடைத்த நன்மையாகும் என்றார்.

"இப்பாடசாலைக்கு குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அடுத்த வருடம் ஒரு கிணறு வெட்டுவதற்கான நிதி ஒதுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினருக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பாடசாலை அதிபர் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா கைம்பெண் அன்னபூரணத்தின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் மரணசாதனமில்லாதமரணச் சொத்தின் தத்துவகாரரை நியமிக்கும்படியான விண்ணப்ப விடயத்தில்.

செல்லையா அருள்சுதன்,
மானிப்பாய்,
— மனுதார்.

வழ. இல தத்துவம் /3474

எதிராக

1. லக்ஸ்மன் வைரமுத்து இராசையா பெண் கிருபாநிதி,
2. லக்ஸ்மன் வைரமுத்து இராசையா இருவரும் மானிப்பாய், தற்பொழுது கனடா
3. செல்லையா தேவமகிபன், கனடா.

— எதிர்மனுதார்கள்.

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப் பட்ட காலஞ் சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது. இம்மன்றில் அதன் பிரகாரம் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு முன்னராக இந் நீதிமன்றில் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் இறுதிக்கட்டளையாகக்கூடாதென்பதற்குக் தகுந்த காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

(ஒப்பம்)
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்

வரையப்பட்டது.
**வ. மயில்வாகனம்.**
மனுதாரின் சட்டத்தரணி.

7302


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
ஆலயமணி
(புதிய பிரதி)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் புதுறோட்டுச்சந்தி 1. செல்லப்பாபொன்னம்பலமும்
2. உமாதேவியும்

இல. ஈடு / 504 வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெரு லோறன்ஸ் அழகரட்ணம்
கைம்பெண் சிறில்டா உவிலிமிறட்
பூமணி அழகரட்ணம்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு / 504 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் சட்டளைப் படி, பின்னர் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980 ஆம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 24-ஆம் திகதி (24-11-80) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்-

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 15875 - இதில் ரூபாய் 10,000/-க்கு 21-6-77 திகதி தொடக்கம் 7-6-79 திகதி வரைக்கும் 100க்கு 15 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 929-87 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாணம் சீதாரி 3ம் குறுக்குத்தெரு இறை "விளாங்கர் தோட்டமும், இராமா தோட்டமும், சீதாரிதோட்டமும், புகையிலைத்தோட்டமும்" நிலப்பரப்பு ஒன்று குழி ஒன்பதுடன் எட்டில் மூன்றும், வீடும் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், எல்லை கிழக்கு இராயப்பு கைம்பெண் மேரியோசெட்பின் பரிமளத்தின் ஆதனம். வடக்கு ஞானப்பிரகாசம் சைமன் சின்னத்துரைக்கும் பெண் வில்வி யோசெப்புக்குமுரிய ஆதனம். மேற்கு 3-ம் குறுக்குத்தெரு, தெற்கு பொன்னுசாமியின் உரிமைக்காரரின் ஆதனம், இதடங்கலும்.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்,
ஏலவிற்பனையாளரும்,

தெல்லிப்பழை,
3-10-1980.

7288

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/9027

கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
(1) கந்தையா இராசரத்தினமும் அவரின் மனைவி
(2) கனகேஸ்வரியும் —வாதிகள்

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
முத்துக்குமாரு இராமலிங்கம் —பிரதிவாதி

கச்சேரியடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
(1) பொன்னையா நேசதுரையும் அவரின் மனைவி
(2) பூபதியும்.

திருநெல்வேலியைச் சேர்ந்த
(3) எஸ். கந்தையாவும் அவர் மனைவி
(4) கனகம்மாவும்.

மேலதிக வாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/9027 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 23-ந் திகதி (23-12-1980) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 21025/- உம் மேலும் ரூபா 13000/- ; வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1967-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 581-91 கொடுக்கவேண்டியிருப்பதாலும் இதில் தீர்வைத் தொகையால் ரூபா 17500/-செலவு தொகையால் ரூபா 581-91 சதம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைச் செலவு ரூபா 63/-ம் அறவிடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட கழிவுகளுடன் மேலும் ரூபா 21/-கழித்து அறவிடப்படும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட வண்ணார் பண்ணைப் பிரிவு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கிலுள்ள 'பல்லுவிளித்தோட்டம்' என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 5½ ஆறுல் 1940-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ந் திகதி (6-7-1940) உத்தரவுபெற்ற உலாந்தா எஸ். ஜே. பிள்ளை அவர்களால் அளந்து கீற பட்ட 90-ம் இலக்கப் படத்தின்படி அக்காணி 5 பரப்பு 6 1/6 குளியும் அதனைச் சேர்ந்த வீடுகளும், கிணறுகளும் வான்பயிர் செய்பயிர்களும் உள்ளன. எல்லை கிழக்கில் சபாபதியின் மனைவி கனகேஸ்வரியின் ஆதனமும். எல்லை வடக்கு சி. கே. தம்பியின் வாரிசாளர்களின் ஆதனமும் எல்லை மேற்கில் கந்தையாவின் மனைவி சிவயோகத்தின் ஆதனமும் எல்லை தெற்கில் வீதியும் உள்ளன. இவை D 279 120-ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.**
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதய",
காங்கேசன்துறை வீதி,
கொண்டாவில்,
27-10-1980.

7292

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி

Seat Work in English-7 Rs 7-75
NEW METHOD
Seat Work in English-5 Rs. 5-00
Seat Work in English-4 Rs. 3-25
Seat Work in English-3 Rs. 2-50

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## கூட்டுறவு மகளிர் குழு

(புலோலி)

கூட்டுறவு இயக்கத்தை வளர்த்து கூட்டுறவு அடிப் படையில் கிராமிய பொருளா தார அபிவிருத்தியை மேம் படுத்துவதற்கான நடவடிக்கை களைப் பருத்தித்துறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கல்வி உத்தியோகத்தர் திரு. எஸ் செல்வராசா மேற்கொண் டுள்ளார்.

இதற்கிணங்க அண்மையில் பருத்தித்துறை சித்தவிநாயகர் பாடசாலை மண்டபத்தில் சங்க மட்டத்திலான கூட்டுறவு மகளிர் குழுத் தெரிவொன்று சங்கத் தலைவர் திரு. கே. துரைராசா தலைமையில் நடை பெற்றது. கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம், தேசிய கூட்டுறவுச் சபையைச் சோந்த திரு. பத்திநாதன் ஆகியோா இதில் கலந்துகொண்ட னர். அங்கத்தவர்களாக ப் பின்வருவோர் தெரிவு செய் யப்பட்டனர். தலைவி: செல்வி இ. பாக்கியசுந்தரேஸ்வரி, உபதலைவி: செல்வி பா. நவ ரஞ்சிதமலர், செயலாளர்; செல்வி மி. யசிந்தா, உபசெய லாளர்: திருமதிக .சிவஞானம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

“நடாநாட்டுக்குள் இருந்து

# வீரம் பேசுவதை விடுத்து

## கிழக்கே வந்துசெயல் படுங்கள்”

### தெல்லிப்பழையில் பட்டிருப்பு எம். பி. வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

'எம்மைப் பார்த்து அரசுக்கு அடிபணிந்துவிட்டோம்; தமிழ் ஈழக் கோரிக்கையை மறந்து விட்டோம்; அரசாங்கம் வழங் கும் கொழுத்த சம்பளத்தில் ஆடம்பர வாழ்வு வாழ்கிறோம் என வசைமாரி பொழிபவர் கள் அம்பாறை, மட்டக் களப்பு, திருமலை மாவட்டங் களுக்கு வந்து நிலைமையை நேரில் பார்த்தால் எமது நட வடிக்கைகள் சரியா பிழையா என்பதனை அறியமுடியும். குடாநாட்டுக்குள் இருந்து வீரம் பேசுவதை விடுத்து கிழக்கே வந்து எமது மண் அபகரிக்கப்படுவதையும், எமது மக்கள் துன்புறுத்தப் படுவதையும் தடுக்க உதவுங் கள்.'

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெற்ற மாப்பெரும் தியாகிகள் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பட் டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

அமரர்கள் வன்னியசிங்கம், திருச்செல்வம், வண. பிதா தனிநாயகம் அடிகள் ஆகிய மூவரையும் நினைவுகூருமுகமாக நடந்த இக்கூட்டத்திற்கு திரு. ஐ. பி. துரைரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. கணேசலிங்கம் மேலும் கூறியதாவது:-

'அமரர்கள் வன்னியசிங்கம், திருச்செல்வம், தந்தை செல்வா போன்றோரால் கட்டி வளர்க் கப்பட்ட இயக்கத்தில் முன் னர் நான் ஈடுபாடு கொண்டி ராதுவிட்டாலும் அந்த முப் பெருந் தலைவர்களது வழிவந்த திரு. அமிர்தலிங்கத்தின் தலை மையை ஏற்று அவர் இடும் கட்டளையை நிறைவேற்று கின்ற நிலையில் இன்று இந்த இயக்கத்துடன் என்னை இணைத் துள்ளேன்.

### அமைச்சர் பதவிகள் தருவதாகக் கூறினர்

'கிழக்கு மாகாண எம். பி. க் களைத் தம்பக்கம் சேர்ப்பதில் அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்துவருகிறது. என்னைப் பலதடவை அரசாங்கத் தரப் பினர் அரசுடன் சேருமாறு கேட்டனர் அமைச்சர்கள் இரு வரை ராஜினாமாசெய்யவைத்து அவ்விடத்திற்கு எம்மை நிய மிப்பதாகவும் கூறினர். ஆனால் நான் இயக்கத்தை விட்டு அண்ணன் இராசதுரை போன்று செயல்பட எள்ள ளவும் துணியமாட்டேன். இலட்சியத்திற்கு இழுக்கு இல்லாமல் எமது பிரதே சத்தை, எமது மக்களைக் காப்

(5-ம் பக்கம் பார்க்க)

பிலிப்பைன்ஸ் சூறாவளி:

# ஆறு லட்சம் பேர் வீடிழந்தனர்!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சூறாவளியினால் ஆறு லட்சம் பேர் வீடிழந்துள்ளனர்.

இச்சூறாவளி பிலிப்பைன் ஸின் வடபகுதியில் ஏற்பட்டது. சுமார் நூறு பேர் பலி யானார்கள்

ஐந்துகோடி முப்பது லட்சம் டாலர் மதிப்புள்ள பயிர்ச் சேதம் ஏற்பட்டதாக அரசு மதிப்பிட்டுள்ளது.

# ஈரான் வானொலியில்பேச ஜனாதிபதி சத்தர் மறுப்பு!

## பேச்சுச் சுதந்திரம் வேண்டுமாம்

தெஹ்ரான் நவ 9

ஈரானின் வானொலியிலோ தொலைக்காட்சியிலோ தாம் பேசப்போவதில்லை என்று ஈரான் ஜனாதிபதி ஜனப் பாணி சத்தர் தெரிவித்துள் ளார்.

தனது பேச்சுக்கூட தணி க்கை செய்யப்படலாம் என்று அஞ்சுவதாலேயே தாம் அவ் வாறு பேசப்போவதில்லை என் றும் அவர் விளக்கமளித்துள் ளார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் குத்துப்ஷா தே கைது செய்யப்பட்டது குறி த்து ஆத்திரமடைந்துள்ள ஜனாதிபதி; ஈரானில் யுத்தகால மாக இருந்தாலும் பேச்சுச் சுதந்திரம் கடைப்பிடிக்கப் படுவதை தாம் விரும்பவில்லை என்றும் கூறினர் (கு)

## ‘அன்புலன்ஸ்’ படகுச்சேவை

(ஊர்காவற்றுறை)

கடந்த எட்டு ஆண்டுகளாக பழுதுற்ற நிலையில் இருந்த ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்த மான அன்புலன்ஸ் படகு திருத்தப்பட்டுள்ளது.

1972ம் ஆண்டு பழுதுபட்டு திருத்தப்படாமல் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் இருந்து வந்த ஊர்காவற்றுறை அரசி னர் வைத்தியசாலைக்குச் சொந்தமான அன்புலன்ஸ் படகு ஊர்காவற்றுறை மாவ ட்ட வைத்திய அதிகாரி செல்வி. வசுந்தராதேவி பெரிய தம்பியின் பெருமுயற்சியினால் திருத்தப்பட்டு நேற்று முன் தினம் முதல் சேவையில் ஈடு பட்டுள்ளது.

இதனால் நெடுந்தீவு, நயினா தீவு, அனலைதீவு, எழுவை தீவு போன்ற இடங்களிலு ள்ள நோயாளர்கள் பெரிதும் பயனடைவார்கள். (கு)

## “நாளைதேசியஎதிர்ப்புத்தினம் வெற்றிக்கு உதவுங்கள்”

### 16 அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் நாளை செவ் வாய்க்கிழமை நடைபெறவு ள்ள தேசிய எதிர்ப்புத் தின த்தை யாழ். மாவட்டத்தி லும் வெற்றியாக்க ஒத்துழைக் குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

மூன்று கோரிக்கைகளை முன் வைத்து நாளை நடைபெறவு ள்ள தேசியஎதிர்ப்பு தினத்தின் போது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தும், மறியல் போராட்டம் நடாத் தியும், கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும், பாடசாலைக ளைப் பகிஷ்கரித்தும், உண்ணா விரதமிருந்தும் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுமாறு 16 அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள் என்பன கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாளைக் காலை 10 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை யாழ். கோட்டை முனீஸ்வரன் தேவ ஸ்தானத்தில் சத்தியாக்கிரக மும், உண்ணாவிரதமும் நடை பெறவுள்ளது.

- உயர்ந்து வரும் வாழ்க் கைச் செலவிற்கு ஏற்ப ரூபா 300 சம்பள உயர்வு கொடுக்கவும்
- வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு ஒவ்வொன்றிற் கும் ரூபா 5 கொடுக்கவும்.
- வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக வேலை கொடுக்க வும்.

என்ற மூன்று கோரிக்கை களை முன்வைத்தே இந்த எதிர்ப்புத்தினம் நடைபெறுவ தாக தொழிற்சங்க நடவடிக் கைக் குழுவின் வடபிரதேச அமைப்பாளர் திரு. எஸ். விஜ யானந்தன் வெளியிட்ட அறிக் கையில் தெரிவித்துள்ளார். (கு)

## தமிழீழம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. 1982ல் தமிழ் ஈழத்தை பிரகடனம் செய்வது சம்பந்தமான திரு. வைகுந்த வாசனின் பிரகடனம்; அங் கத்தவர்களின் கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது.

நேற்று முன்தினம் செயற் குழுநிறைவேற்றிய தீர்மானங் கள் அனைத்தும் நேற்றைய பொதுச்சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

### தீர்மானங்கள்

வெங்காயம், மிளகாய் இறக் குமதி காரணமாக விவசாயி கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றும் இது சம்பந்தமாக எதிர்வரும் வரவு செலவுத் திட்ட விவாதத் தில் கூட்டணி எம். பிக்கள் கடுமையான முறையில் கண்ட னம் தெரிவித்து வெங்காயம், மிளகாய் இறக்குமதியை நிறு த்த அரசைக் கோரவேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்றைய பொதுச் சபைக்கூட் டத்தில் நிறைவேற்றப்பட் டது.

வேலைநிறுத்தம் காரணமாக வேலை இழந்தவர்கள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தி, வேலையில் மீண்டும் அவர்களை அமர்த்த முழு முயற்சி எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் நிறைவேறியது.

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டணித் தலைவர்களுக்கு மகஜர் அனுப்பப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை என்றும்; இத ற்கு உடன் பரிகாரம் காண வேண்டும் என்றும் இந்த இளை ஞர்கள் கோரினர்.

''ஆத்திரம் வேண்டாம். பொறுமையாக இருங்கள். உங்கள் கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று திரு. அமிர்தலிங்கம் கூறியும் இளைஞர்கள் ''உடன் திருங்கள்'' என்று கோஷ மெழுப்பி சுமார் இருபது நிமிடங்களின் பின்னர்கலைந்து சென்றனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணை நகர் அருள்மிகு செந்தில் கதிர்வே லாயுத சுவாமி திருக்கோயில் கந்தர் ஷஷ்டித் திருவிழாவில் இன்று இரவு 7 மணிக்கு வித் துவான் சி. குமாரசாமி ''செஞ் சச்சனகல்லு நெகிழ்ந்துருக'' என்னும் பொருள்பற்றி சிறப் புச் சொற்பொழிவாற்றுவார்.

## பாலமுரளி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இசைமேதை பாலமுரளி கிருஷ்ணா, இம்மாதம் 13ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தினங்கள் மட்டும் இலங் கையில் தங்கும் பாலமுரளி கிருஷ்ணா இலங்கை இளம் கலைஞர் மன்றத்தினர் நல்லூ ரில் நிறுவவிருக்கும் கலாசார மண்டப அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொள்வார்.

## வேதாகமத்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட வேதாகமசங்கத்தின் கிளைச்சங்கம் 1812-ம் ஆண்டு இலங்கையில் அமைக்கப்பட் டது. இச்சங்கம் கடந்த நூற்று அறுபத்தெட்டு ஆண்டுகளாக இலங்கையில் சாதி, சமய, நிற வேறுபாடின்றிச் செயலாற்றி வருகிறது.

கிறிஸ்தவர் களாகிய நாம் கிறிஸ்துவை வெளிப் படுத்துப ... வேண்டும்' (அ)

## நத்தார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியில் பங்கு பற்றும் சித்திரங்கள் யாவும் அடுத்த மாதம் 15ம் திகதி பிற்பகல் 1-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை காட்சிக்கு வைக்கப்படும். (அ)

மக்கினொன் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லா மலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இப்பத்திரிகை ஈழநாடு ... ஸ்தாபன ... மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 10-ம் திகதி ...அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at General Post Office Sri Lanka under No QB 8948/78 The Eelanaadu P. B. No 49. ...rams Eelanaadu. Phone 38..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org